**IN THE COURT OF II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, THANJAVUR**

**DEPOSITION OF WITNESS**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | SC.77/2019 | Village | : | |
| Prosecution witness | : | PW-13 | Taluk | : | |
| Name | : | திரு. ராஜேஷ் | Occupation | : | |
| Father Name | : | திரு. விஸ்வநாதன் | Age | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 23.9.25.**

A6 accused absent. U/sec.355 BNSS petition filed and allowed. Others present.

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தஞ்சாவூர், மகர்நோம்புசாவடி வசித்து வருகிறேன். நான் தற்போது வடக்குவாசல் டாஸ்மார்க் நிறுவனத்தில் கண்காணிப்பாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 18.1.2018 அன்று பழைய மாரியம்மமன் கோவில் தெரு, காமராஜ்நக ர் டாஸ்மார்க் நிறுவனத்தில் நான் கண்காணிப்பாளராக வேலை பார்த்தபோது இரவு 10 மணிக்கு கடையை பூட்டிவிட்டு வரும்போது வெளியில் ஒரே சத்தமாக இருந்தது. யாரோ ஒருவரை தாக்கி கொண்டிருந்தார்கள் , அதிக சத்தமாக இருந்தது. அதனால் நான் தாலுக்கா போலிஸ்க்கு போன் செய்து விஷயம் சொன்னேன் அவர்கள் பத்து நிமிடத்தில் வந்துவிட்டார்கள், அவர்களிடம் சொல்லிவிட்டு நான் கிளம்பிவிட்டேன். போலிஸார் என்னை விசாரித்தார்கள். அன்று தாக்கபட்ட நபர் பெயர் அப்பு என்று பின்னர் கேட்டு தெரிந்துகொண்டேன். சாட்சி ஆஜர் எதிரிகளை பார்த்துவிட்டு அவர்களில் இவர்கள் யாரும் இல்லை என்று சொல்கிறார்.

அரசுதரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி சாட்சியை பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்குவிசாரணைக்கு அனுமதி கோரியதன் பேரில் அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

18.1.2018 அன்றுதான் நான் அந்த கடையில் நீலகண்டன் என்பவரிடமிருந்து பொறுப்பு எடுத்துகொண்டேன் என்றால் ஆமாம். அங்கு என்னோடு தமிழ்செல்வன் முருகானந்தமும்

விற்பனையாளராக வேலை பார்க்கிறார் என்றால் ஆமாம். அன்று கடையை பத்துமணிக்கு சாத்திவிட்டு வரும்போதுதான் சம்பவமா என்றால் ஆமாம். அன்று போலிஸார் விசாரணையில் பாரில் ஒருவர் தண்ணி அடித்து கொண்டிருந்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ஆசைதம்பியை என்பவரை நான் கேட்டதாகவும் அவர் தண்ணி அடித்து கொண்டிருக்கும் நபர் பெயர் அப்பு என்று சொன்னதாக போலிஸார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. டாஸ்மார்க் பார் சொந்தகாரர் கலிவர்தன் என்று பின்பு கேள்விபட்டேன் என்றால் ஆமாம். அவரை தெரியுமா என்றால் தெரியாது. அந்த கலிவரதன்தான் 9 பேரோடு சேர்ந்து அப்பு என்பவரை அரிவாளால் மாறிமாறி வெட்டியதாக போலிஸாரிடம் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. மாறிமாறி வெட்டியதை பார்த்துபயந்து ஓடிவிட்டோம் என்றும் அப்போது இறந்து போன அப்புவின் உறவினர்கள் வந்தார்கள் என்றும், பின்பு விசாரித்தபோது முன்விரோதம் காரணமாக அப்புவை வெட்டியதாக நான் போலிஸ் வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 19.1.2018 அன்று நான் ஒயின்ஷாப்பை திறந்தோமா என்றால் இல்லை. ஏன் என்றால் மேற்படி சம்பவத்தை மேலஅதிகாரிக்கு தெரிவித்தால் அவர்கள் பூட்டசொன்னார்கள். 20.1.2018 அன்று பகல் 12 மணிக்கு திறந்தோம் என்றால் ஆமாம். அப்போது போலிஸார் வந்துவிசாரித்தபோது தகவல் சொன்னேன் என்றால் மற்ற விஷயங்களை கேட்டு தெரிந்துகொண்டார்கள். மற்ற விஷயங்கள் என்ன என்றால் எப்ப பூட்டினோம், போலிஸ்க்கு சம்பவம் பற்றி தகவல் சொன்னவிஷயம். எதிரிகள் மிரட்டு கேட்டு கொண்டதால் நான் பயந்துகொண்டு ஆஜர் எதிரிகளை காப்பாற்ற பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

இல்லை

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/- ப ,நாகராஜன்)
2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.